# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No. 59/2024

2026 –ம் ஆண்டு மார்ச் மாதம் 12 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.2 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு.R.சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 12.03.2026**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.வெங்கடேசன் (PW– 2) | வயது | : | 39/2026 |
| த/க பெயர் | : | திரு. உலகநாதன் | தொழில் | : | சுய தொழில் |
| முகவரி | | கடுக்காகாடு | வட்டம் | : | மன்னார்குடி |

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை ;–**

1) இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. எமிலிமேரி சொல்லியதன்பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் உயில் இருப்பதாக சொல்லியுள்ளதால் அந்த உயில் ஆவணத்தை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். உயில் ஆவணத்தில் உள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மோதிலால் சொத்தை தான் வாதி கிரயம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். என்ன பரிகாரம் வேண்டி வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் வாதி கிரயம் வாங்கிய இடம் முழுவதும் வேண்டும் என்று வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார்.
2) வாதி கிரயம் வாங்கிய சொத்தும் பிரதிவாதி கிரயம் வாங்கிய சொத்தும் தனித்தனியாக உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தை லோகநாதன் கிரயம் வாங்கிய பின்னர் பிரதிவாதியுடன் பிரச்சனை ஏற்பட்டதா என்றால் இல்லை, எமிலிமேரி வாங்கிய பின்னர் தான் பிரச்சனை ஏற்பட்டது. எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் எமிலிமேரி சொல்லி தயார் செய்யப்பட்டது என்றும் அதன்பேரில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.20 10:08:31 +0530

District Munsif

Mannargudi.